





# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்








மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 95 | உள்ளூர் - 05.04.2026 ஞாயிறு | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 95 | வெளியூர் - 06.04.2026 திங்கள் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com



அட்சய திரிதியை சுப நேரம்,/ முறை / முக்கியத்துவம்!

தமிழ்நாடு அச்சிடும் துறை – 23 காலியிடங்கள்!

பயணிகள் ரெயில் சேவையில் மாற்றம்!

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!


## ஈஸ்டர் பண்டிகை: ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி வாழ்த்து!

புதுடெல்லி, ஏப். 05–

ஈஸ்டர் பண்டிகை முன்னிட்டு இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ மக்களுக்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் ஜனாதிபதி திரவுபதி முர்மு எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள ஈஸ்டர் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:–

அனைவருக்கும் ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவுகூரும் இந்தப் புனிதமான நல்வாய்ப்பு, சத்தியம், அன்பு, இரக்கம், தியாகம் மற்றும் மன்னிப்பு ஆகிய நற்பண்புகளைத் தழுவ நம்மை ஊக்குவிக்கிறது.

இன்று நல்லிணக்கம், அமைதி மற்றும் சகோதரத்துவத்தை மேம்படுத்துவதற்கான நமது உறுதியைப் புதுப்பித்து, ஒரு சிறந்த எதிர்காலத்திற்காகக் கூட்டாகப் பாடுபடுவோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.





இதே போல், பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்திருப்பதாவது;–

ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள். இந்தப் புனித நாள் நம்பிக்கையையும் புதுப்பித்தலையும் கொண்டாடுகிறது. இது அனைவரின் வாழ்விலும் அமைதியையும், மகிழ்ச்சியையும், ஒளியையும் கொண்டுவரட்டும். இயேசு கிறிஸ்துவின் போதனைகள் அனைவரையும் கருணையுடன் இருக்கத் தூண்டி, சமூகத்தில் ஒற்றுமை உணர்வை வலுப்படுத்தட்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## முதல்வர் மு.க. ஸ்டாலினின் 3-ம் கட்ட பிரச்சார சுற்றுப்பயணம் பற்றிய விவரம் வெளியீடு!

சென்னை, ஏப். 05–

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், கடந்த மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தனது தேர்தல் பயணத்தைத் தொடங்கிய அவர், தற்போது அதன் தொடர்ச்சியாக மூன்றாம் கட்டப் பரப்புரையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். அதன்படி, ஏப்ரல் 6ஆம் தேதி (திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் புதுச்சேரியில் நடைபெறும் பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்கிறார்.



இந்த நிகழ்வின் மூலம் புதுச்சேரியைச் சார்ந்த தொகுதிகளில் போட்டியிடும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக அவர் வாக்கு சேகரிக்க உள்ளார். இதற்கான விரிவான ஏற்பாடுகளைத் திமுக தலைமைக்கழகம் மற்றும் உள்ளூர் கட்சி நிர்வாகிகள் மேற்கொண்டு வருகின்றனர். அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 7ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கு கடலூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார். இதில் திட்டக்குடி, விருத்தாசலம், குறிச்சிப்பாடி, பன்ருட்டி, கடலூர், நெய்வேலி, புவனகிரி, காட்டுமன்னார்கோயில் மற்றும் சிதம்பரம் உள்ளிட்ட தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரித்துப் பேசுகிறார்.

அதனைத் தொடர்ந்து அன்று மாலை 5 மணிக்கு நாகப்பட்டினத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் நாகப்பட்டினம், கீழ்வேளூர் மற்றும் வேதாரண்யம் தொகுதி மக்களிடையே வாக்கு சேகரிக்கிறார். அதன் தொடர்ச்சியாக ஏப்ரல் 8ஆம் தேதி (புதன்கிழமை) காலை 9 மணியளவில் சீர்காழியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சீர்காழி மயிலாடுதுறை, பூம்புகார் உள்ளிட்ட தொகுதிகளுக்கான பொதுக்கூட்டத்திலும், மாலை 5 மணிக்கு விழுப்புரத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் விழுப்புரம், வானூர் திண்டிவனம், விக்கிரவாண்டி, திருக்கோயிலூர், செஞ்சி, மயிலம் உள்ளிட்ட தொகுதிகளை உள்ளடக்கிய வேட்பாளர்களை ஆதரித்துப் பேசுகிறார்.

இதனையடுத்து பயணத்தின் தொடர்ச்சியாக ஏப்ரல் 9ஆம் தேதி (வியாழக்கிழமை) காலை 9 மணிக்கு திருவண்ணாமலையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உளுந்தூர்ப்பேட்டை ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, செங்கம், திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு மற்றும் வந்தவாசி உள்ளிட்ட பல்வேறு தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரித்துப் பரப்புரை செய்கிறார். 3ஆம் கட்ட பிரச்சாரத்தின் இறுதியாக அன்று (09.04.2026) மாலை 5 மணிக்கு மறைமலைநகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர், தாம்பரம் மற்றும் பல்லாவரம் உள்ளிட்ட முக்கியத் தொகுதிகளுக்கான தேர்தல் பரப்புரையுடன் நிறைவு செய்கிறார்.

எனவே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேற்கொள்ளும் தேர்தல் பரப்புரைப் பயணங்கள் தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்ய திமுக தலைமைக்கழகம் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே திட்டமிட்டபடி பரப்புரை இடங்களுக்குச் சரியான நேரத்திற்குச் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி வழியில் தொண்டர்கள் எவ்வித வரவேற்பு நிகழ்ச்சிகளையோ, கூடுதல் நிகழ்வுகளையோ ஏற்பாடு செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், பரப்புரைப் பயணத்தின் போது கட்சி முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் தங்கியிருக்கும் இடத்திற்கு நேரில் வருவதைத் தவிர்த்து, நேரடியாகப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். பயண நேரத்தைக் குறைத்து திட்டமிட்டபடி கூட்டங்களை நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சென்னை அண்ணா அறிவாலயத்திலிருந்து திமுக தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஏப்ரல் 10–ந் தேதி முதல் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகம் – தேர்தல் ஆணையம் திட்டம்!



சென்னை, ஏப். 05–

சட்டசபை தேர்தலுக்காக வாக்காளர்களுக்கு தகவல் தரும் சீட்டு வழங்கும் பணியை வரும் 10–ந் தேதி தொடங்க தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அந்த சீட்டில் வாக்குச்சாவடி பெயர், வாக்குப்பதிவு நாள், நேரம் உள்ளிட்ட தகவல்கள் இடம்பெறும். வரும் 17–ந் தேதிக்குள் இப்பணியை முடிக்க, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தபபட்டுள்ளது.

### கவுன்ட்டவுன் ஸ்டார்ட்ஸ்!


## ஈரானுக்கு 48 மணிநேர கெடு தங்கம், பங்குச்சந்தை என்னவாகுமோ?

### பதற்றத்தில் உலக நாடுகள்!!









அமெரிக்கா, ஏப். 05–

48 மணி நேரம், அதற்குள் ஒரு முடிவு எடுங்கள், இல்லை என்றால் நரகம் உங்கள் மேல் மழையாய் பொழியும். இது ஏதோ ஹாலிவுட் பட வசனம் அல்ல, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் ஈரானுக்கு விடுத்துள்ள நேரடி எச்சரிக்கை.

ஹார்மூஸ் ஜலசந்தியை திறக்க வேண்டும் அல்லது உடன்படிக்கைக்கு வர வேண்டும் என டிரம்ப் கொடுத்துள்ள இந்த காலக்கெடு, உலக நாடுகளை மேலும் பதற்றத்தில் ஆழ்த்தியுள்ளது. ஒரு பக்கம் போருக்கான கவுண்ட்டவுன், மறுபக்கம் கிடுகிடுவென உயரும் கச்சா எண்ணெய் விலை என திங்கள் கிழமை (ஏப்ரல் 6ல்),இந்தியப் பங்குச் சந்தை என்னவாகுமோ என்ற பீதி இப்போதே தொற்றிக்கொண்டுள்ளது. ஏற்கனவே கச்சா எண்ணெய் விலை பறந்து கொண்டிருக்க, பங்குச் சந்தைகள் என்ன செய்வது என செய்வதறியாது தாறுமாறாக வர்த்தகமாகி வருகின்றன.

இந்த சூழலில் ஈரான் நரகமாக மாறும் என்ற டிரம்பின் மிரட்டலால் இனி என்னவாகுமோ? என்ற அச்சம் மேலும் தொற்றிக் கொண்டுள்ளது. அமெரிக்க இஸ்ரேல் கூட்டுப்படைகள், ஈரான் ராணுவதற்கு தொடர்ந்து பதற்றத்தை கொடுத்து வரும் நிலையில், ஈரான், டிரம்பின் எச்சரிக்கைக்கு பணியுமா அல்லது இன்னும் போரானது விஸ்வரூபம் எடுக்குமா? என்ற பல கேள்விகள் முதலீட்டாளர்கள் மத்தியில் காணப்படுகிறது.

கடந்த 25ம் தேதி அன்று ஹார்மூஸ் ஜலசந்தியை திறக்க வேண்டும் என 15 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி டிரம்ப் ஒரு பட்டியலை ஈரானுக்கு வெளியிட்டார். ஆனால் எதற்கும் அசராத ஈரான், இதுவரையில் அமைதி பேச்சு வார்த்தைக்கும் உடன்படவில்லை. இதை கருத்தில் கொண்டு ஈரானின் மின் நிலையங்கள், எரிசக்தி நிலையங்கள் என பல முக்கிய பகுதிகளில் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆரம்பத்தில் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. அடுத்த 10 நாட்களில் தாக்குதல் நடத்தப்படாது என்று டிரம்ப் கூறினார். ஆனால் அதெல்லாம் சில நாட்கள் கூட நீடிக்கவில்லை. இந்த சூழலில் இந்த 48 மணி நேர கெடுவையடுத்து இன்னும் என்னவெல்லாம் செய்ய காத்திருக்கிறாரோ ?என்ற கேள்வியே எழுந்துள்ளது.

ஏப்ரல் 6 வரை விதிக்கப்பட்டுள்ள கெடு நெருங்கி வரும் சூழலில், ஈரான் ஒப்பந்தத்திற்கு வருமா ?அல்லது ஹார்மூஸ் ஜலசந்தியை திறக்குமா?, ஒரு வேளை ஈரான் இதற்கு அசையா விட்டால் போர் இன்னும் மோசமான நிலைக்கு செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மத்திய கிழக்கு பகுதியில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. இது ஏப்ரல் 6ல்,

பங்குச் சந்தையில் என்ன செய்ய காத்திருக்கிறதோ, தங்கம் விலை என்னவாகுமோ? ஏற்கனவே சாமானியர்கள் பணவீக்கத்தால் தத்தளித்து வரும் நிலையில், பணவீக்கம் என்னவாகுமோ, பெட்ரோல், டீசல் விலையானது அதிகரிக்குமோ, மொத்தத்தில் இந்தியா போன்ற பெரிய இறக்குமதியாளர்கள் எப்படி சமாளிக்க போகிறார்கள் என்ற குழப்பமே முதலீட்டாளர்கள் மத்தியில் காணப்படுகிறது. இது மேலும் அந்நிய முதலீடுகள் தொடங்கி, நிறுவன முதலீட்டாளர்கள் வரையில் வெளியேற காரணமாக அமையலாம். ஆக சந்தைகள் மீண்டும் ஆட்டம் காணத் தொடங்கலாம். ஆக சிறு முதலீட்டாளர்கள் மிக கவனமுடன் வர்த்தகத்தை தொடங்கலாம்.

## விஜய்யின் பெரம்பூர் வேட்புமனுவில் மீண்டும் குழப்பம்!

திருச்சி, ஏப். 05–

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், சட்டமன்ற தேர்தலில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு என இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார். இந்நிலையில், திருச்சியில் அவர் தாக்கல் செய்திருந்த வேட்புமனுவில் பிழைகள் இருந்தது விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்கிறது.



வேட்புமனுவில் பிழைகள் இருப்பினும் அது, நிராகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது. இது தெரிந்தும், விஜய் தவறு செய்திருக்கிறாரா? என்கிற கேள்வி எழுந்திருக்கிறது.

பெரம்பூரில் தாக்கல் செய்த மனுவில், “எஸ்.ஏ. சந்திரசேகரன் என்பவரின் மகனும் 52 வயதுடைய க. எண்: 36, கேசுரினா டிரைவ்,கபாலீஸ்வரர் நகர், நீலாங்கரை சென்னை 600 041 என்ற முகவரியில் வசிக்கின்ற இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு வேட்பாளருமாகிய ச.ஜோசப் விஜய் என்கிற நான், இதனால் சத்தியப் பிரமாணம் செய்து, கீழ்க்கண்டவாறு உறுதியளிக்கிறேன்’’ என தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதுவே, திருச்சி கிழக்கில் தாக்கல் செய்த மனுவில், “எஸ்.ஏ. சந்திரசேகரன் என்பவரின் மகனும் 51 வயதுடைய க. எண். 36, கேகரினா டிரைன்,கபாலீஸ்வரர் நகர், நீலாங்கரை சென்னை 600 041 என்ற வசிக்கின்ற இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு வேட்பாளருமாகிய ச. ஜோசப் விஜய் என்கிற நான், இதனால் சத்தியப் பிரமாணம் செய்து, கீழ்க்கண்டவாறு முகவரியில் உறுதியளிக்கிறேன்’’ என்று கூறியிருக்கிறார். இதுதான் பஞ்சாயத்தை கிளப்பியிருக்கிறது.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 கீழ், வேட்பாளர்கள் தங்கள் தகுதியை பற்றிய உண்மையான தகவல்களை மட்டுமே வழங்க வேண்டும். வயது என்பது அடிப்படை தகுதி என்பதால், அதில் தவறு நடப்பது சட்ட ரீதியான சிக்கலுக்கு வழிவகுக்கும். வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்படும் நாளில், தேர்தல் நடத்தும் அலுவலர் விவரங்களை சரிபார்ப்பார். வயது என்பது எண் சம்பந்தப்பட்டது எனில், தட்டச்சு பிழையாக கருதி திருத்த வாய்ப்பளிக்கலாம். அல்லது மனுவை நிராகரிக்கவும் வாய்ப்பு இருக்கிறது. இது அலுவலரின் முடிவை பொறுத்தது. கட்சி ஆரம்பித்து ஆண்டுக்கணக்கில் ஆகியும், ஒரு வேட்புமனுவை கூட சரியாக நிரப்பப்படவில்லை என்று விஜய் மீது விமர்ச னங்கள் அதிகரித்திருக்கின்றன. ஒருவேளை விஜய் டைம் டிராவல் செய்து வந்தாரோ? என்றும் நெட்டிசன்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றன. மறுபுறம் விஜய் ரசிகர்கள், தமிழ் ஆண்டு கணக்குப்படி விஜய்க்கு வயது 51, அதுவே ஆங்கில ஆண்டு கணக்குப்படி 52 என்று சமாளித்து வருகின்றனர்.

தலையங்கம் மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 05.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 22-ம் தேதி

# உங்க வீட்டுக் கடனையும் விட்டு வைக்காத ஈரான் போர்..!




ஈரான் போர் இந்தியாவில் எல்பிஜி தட்டுப்பாட்டை ஏற்படுத்தி இருக்கிறது. இதன் காரணமாக ஹோட்டல்களில் உணவுகளின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. டீ , காபி உள்ளிட்டவற்றின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. விரைவில் பெயிண்ட், சோப் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலை விரைவில் உயரப்போவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஈரான் போர் நேரடியாக சாமானிய மக்களின் அன்றாட வாழ்க்கையிலேயே தாக்கத்தை ஏற்படுத்தி வரக்கூடிய சூழல் நம்முடைய வீட்டுக் கடனிலும் மாற்றத்தை கொண்டு வர வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவடைந்து இருக்கிறது , இந்தியாவிற்கு எரிபொருள் வரத்து நின்று போய் விட்டது. இதன் காரணமாக இந்தியாவை சேர்ந்த நிறுவனங்கள் அதிக ரூபாய் கொடுத்து கச்சா எண்ணெய் வாங்க வேண்டிய நிலை உண்டாகி இருக்கிறது. இதனால் நாட்டின் வெளிநாட்டு கரன்சி இருப்பிலிருந்து டாலரின் அளவு படிப்படியாக குறைந்த வண்ணம் இருக்கிறது. இப்படி ஈரான் போர் நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்த சூழலில் தான் மிக முக்கியமான இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை குழு கூட்டம் அடுத்த வாரம் நடைபெறுகிறது. ஏப்ரல் 6ஆம் தேதி தொடங்கக்கூடிய இந்த கூட்டம் ஏப்ரல் 8ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் ரிசர்வ் வங்கி ஆளுநர் தலைமையிலான அதிகாரிகள் நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலை குறித்து விரிவான ஆலோசனையை நடத்துவார்கள். ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்கோத்ரா 8ஆம் தேதி காலை 10 மணிக்கு செய்தியாளர்களுக்கு பேட்டியளிப்பார். அப்போது இந்த நிதி கொள்கை குழு கூட்டத்தில் எடுத்த முடிவுகளை அறிவிப்பார்.

வழக்கமாகவே நிதி கொள்கை குழு கூட்டம் என்றாலே ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்படுமா? நம்முடைய வீடு மற்றும் வாகன கடன்களுக்கான வட்டி குறைக்கப்படுமா என்பதுதான் கோடிக்கணக்கான இந்தியர்களின் எதிர்பார்ப்பாக இருக்கும். அந்த வகையில் போர் காரணமாக கொள்கை ரீதியிலான மற்றும் ரெப்போ வட்டி ரீதியான சில முக்கிய முடிவுகளை இந்திய ரிசர்வ் வங்கி எடுப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஆறு பேர் கொண்ட ரிசர்வ் வங்கி குழு 2027 ஆம் நிதி ஆண்டின் முதல் நாணய கொள்கை குழு கூட்டத்தை நடத்துகிறது. கடந்த ஆண்டில் 1.25% வரை ரெப்போ வட்டியை குறைத்த ரிசர்வ் வங்கி இந்த ஆண்டிலும் அதே போன்ற நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுகிறது. ஆனால் போர் காரணமாக அப்படி ஒரு நடவடிக்கைக்கு வாய்ப்பில்லை என நிபுணர்கள் கூறுகின்றனர். ரெப்போ வட்டி விகிதம் தற்போதுள்ள 5.25% என்ற நிலையிலேயே நீட்டிக்கச் செய்யலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. ரெப்போ வட்டி விகிதம் தற்போதுள்ள நிலையிலேயே நீட்டிக்கப்படுகிறது எனும் போது நம்முடைய வீட்டு கடன், வாகன கடன்களுக்கான வட்டி விகிதம் தற்போதுள்ள அதே அளவிலேயே நீடிக்கும். ஒருவேளை நிலைமையை சரி செய்ய வட்டி உயர்த்தப்பட்டால் வீட்டு கடன் ,வாகன கடன் வட்டி உயரும். தற்போதைக்கு வட்டி குறைப்புக்கான வாய்ப்பு இல்லை. எனவே அடுத்த வாரம் இந்திய ரிசர்வ் வங்கி வெ ளியிடக்கூடிய அறிவிப்புதான் நம்முடைய வீட்டுக் கடன் , வாகன கடன்கள் மீதான வட்டியின் நிலையை தீர்மானிக்க போகிறது.

# தமிழகத்தில் உச்சம் தொட்ட மின்சார பயன்பாடு: ஒரே நாளில் 43.47 கோடி யூனிட் நுகர்வு!



சென்னை, ஏப். 05–

தமிழகத்தில் வழக்கமாக ஏப்ரல் கடைசி மற்றும் மே மாதங்களில் மின்சார பயன்பாடு அதிகமாக இருக்கும். அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் கொளுத்தும் என்பதால், மக்கள் வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க மின்விசிறிகள் மற்றும் ஏசிகளை அதிகம் பயன்படுத்துவார்கள். மின்விசிறிகள் 24 மணி நேரமும் நிற்காமல் இயங்கும் அளவிற்கு அதன் பயன்பாடு அதிகரிக்கும். இதனால் மின் நுகர்வும் அதிகரிக்கும்.

ஆனால் நடப்பு ஆண்டில் ஏப்ரல் மாதத்திலேயே மின்சார பயன்பாடு அதிகரித்துள்ளது. அதாவது, தமிழக மின் நுகர்வு நேற்று முன்தினம் 43.47 கோடி யூனிட்களாக உயர்ந்துள்ளது. இது நடப்பு ஆண்டில் பதிவான அதிகபட்ச அளவாகும்.

மாநிலம் முழுவதும் ஒரு நாள் பயன்படுத்தப்படும் மின்சார அளவு 'மின் நுகர்வு' எனப்படுகிறது. இது தமிழகத்தில் தினசரி சராசரியாக 30 கோடி யூனிட்களாக உள்ளது. கோடைக்கால தொடக்கத்திலேயே வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், வீடுகள் மற்றும் அலுவலகங்களில் ஏசி சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் மின் நுகர்வும் உயர்ந்துள்ளது.

கடந்த சில தினங்களாக தினசரி சராசரியாக 40 கோடி யூனிட்களாக இருந்த மின் பயன்பாடு, கடந்த 3–ஆம் தேதி 43.47 கோடி யூனிட்களாக உயர்ந்துள்ளது. இதுவே நடப்பு ஆண்டில் இதுவரை பதிவான அதிகபட்ச அளவாகும். கடந்த 2024 ஏப்ரல் 30–ஆம் தேதி 45.43 கோடி யூனிட்கள் பதிவானதே இதுவரையிலான உச்ச அளவாக இருந்து வருகிறது. நடப்பு ஆண்டில் வெயில் தீவிரம் மேலும் அதிகரித்தால், மின் நுகர்வு இன்னும் உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், ஏப்ரல் இறுதி வாரங்களில் மின் நுகர்வில் வரலாற்றிலேயே புதிய உச்சம் தொடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# ஈரானில் சிக்கித்தவித்த தமிழக மீனவர்கள் 345 பேர் மீட்பு!



சென்னை, ஏப். 05–

மத்திய கிழக்கில் வசித்து வரும் இந்தியர்கள் போரால் நாடு திரும்புவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, ஈரானில் உள்ள இந்த்யர்கள் நாடு திரும்பவதில் சவால் நிலவி வருகிறது. இதையடுத்து, ஈரானில் இருந்து தரைவழியாக அண்டை நாடுகளுக்கு இந்தியர்களை அழைத்து சென்று அங்கிருந்து இந்தியாவிற்கு அழைத்து வரும் பணியை மத்திய அரசு தீவிரப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், ஈரானில் சிக்கித்தவித்த தமிழக மீனவர்கள் 345 பேரை மத்திய அரசு பத்திரமாக மீட்டுள்ளது. ஈரானில் சிக்கித்தவித்த தமிழக மீனவர்கள் 345 பேரும் தரைவழியாக அண்டைநாடான அர்மீனியா அழைத்து செல்லப்பட்டனர். அதன்பின்னர் அர்மீனியாவில் இருந்து விமானம் மூலம் தமிழக மீனவர்கள் 345 பேரும் நேற்று சென்னை வந்தடைந்தனர்.

நாடு திரும்பிய தமிழக மீனவர்கள் 345 பேரையும் மத்திய மந்திரி பியூஷ் கோயல், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் உள்பட முக்கிய தலைவர்கள் விமான நிலையத்திற்கே நேரில் சென்று வரவேற்றனர்.

# மதுரை கோட்ட ரெயில்வே நிர்வாகம் முக்கிய அறிவிப்பு: பாம்பன் பாலத்தின் தண்டவாளம் பராமரிப்பு பணி!



மதுரை, ஏப். 05–

தெற்கு ரெயிவே மதுரை கோட்டம் பாம்பன் பாலத்தில் தண்டவாளம், மின் வழித்தடம், மின் கம்பிகள் போன்றவை பராமரிப்பு பணிகள் ரெயில்வே நிர்வாகம் மேற்கொள்ள உள்ளது. மேலும் ராமேஸ்வரம் வரும் சுற்றுலா பயணிகளுக்கும், ராமேஸ்வரத்தில் இருந்து மீன்கள் ஏற்றுமதி, மதுரையில் இருந்து வணிக பொருட்கள் ஏற்றுமதி மற்றும் வேலைக்கு செல்பவர்கள், கல்லூரிகளுக்கு செல்பவர்களின் வசதிக்காக தினமும் மூன்று ரயில்கள் இயக்கப்படுகிறது. இதன் காரணமாக மதுரை – ராமேஸ்வரம் இடையே இயக்கப்படும் தினசரி ரெயில்கள் ( வண்டி எண் – 56711, 56714 ) ஏப்ரல் 9, 10, 11, 13, 16, 17, 18, 20, 21, 22, 24 ஆகிய நாட்களில் மதுரையில் ரெயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு மண்டபம் ரெயில் நிலையம் வரை மட்டுமே இயக்கப்படும்.

இதே நாட்களில் மறு மார்க்கத்தில் மதுரைக்கு செல்ல ராமேஸ்வரம் ரெயில் நிலையம் செல்லாமல் மண்டபம் ரெயில் நிலையத்தில் இருந்து இயக்கப்படும் அதற்கு ஏற்றதுபோல் பயணிகள் பயணவசதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என தெற்கு ரெயில்வே மதுரை கோட்டம் அறிவித்துள்ளது.

# உங்கள் வீடு புகுந்து அடிப்போம்.. கொல்கத்தா வரை சண்டை நீளும் - இந்தியாவுக்கு பாக். அமைச்சர் பகிரங்க மிரட்டல்!



பாகிஸ்தான், ஏப். 05–

கேரளாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், "ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடியவில்லை. பாகிஸ்தான் மீண்டும் ஏதாவது வேலையைக் காட்டினால், அவர்கள் வாழ்நாளில் மறக்க முடியாத அளவுக்கு இந்தியப் படைகள் பதிலடி கொடுக்கும். இந்த முறை நடவடிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இருக்கும்."என்று பேசியிருந்தார்.

இந்நிலையில் இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் பேசியுள்ளார்.

அவர் கூறியதாவது, "இந்தியா மீண்டும் தாக்க முயன்றால், கடந்த ஆண்டை விட பெரிய அவமானத்தைச் சந்திப்பார்கள்.

இந்த முறை சண்டை வெறும் 200–250 கிலோமீட்டருக்குள் முடிந்துவிடாது. நாங்கள் உங்கள் எல்லைக்குள் நுழைந்து, உங்கள் வீட்டிற்குள்ளேயே புகுந்து அடிப்போம். சண்டையை கொல்கத்தா வரை கொண்டு செல்வோம்.

இந்தியா தனது தோல்விகளை மறைக்க போலி ஆபரேஷன் நாடகத்தை அரங்கேற்றி வருகிறது. தங்கள் ஆட்களின் சடலங்களை எல்லையில் போட்டுவிட்டு பயங்கராதிகள் என கதை கட்டுகிறது" என்று தெரிவித்தார்.

# புதுச்சேரியில் சூடுபிடிக்கும் தேர்தல்களம்: பா.ஜ.க., காங்கிரஸ் அளித்த அதிரடி வாக்குறுதிகள் என்னென்ன..?




புதுச்சேரி, ஏப். 05–

பா.ஜனதா கட்சி சார்பில் தேர்தல் வாக்குறுதியின் விவரம் வருமாறு:–

* புதுச்சேரியில் ரேஷன் கார்டுதாரர்களுக்கு ஆண்டுக்கு 2 கியாஸ் சிலிண்டர்கள் இலவசமாக பொங்கல், விநாயகர் சதுர்த்தி பண்டிகை காலங்களில் வழங்கப்படும்.

* மகளிரின் மேம்பாட்டுக்காக 'பிங்க்' ஆட்டோ திட்டத்தை தொடங்கி பெண்களுக்கு இலவச ஓட்டுனர் பயிற்சி மற்றும் ஆட்டோக்கள் வாங்குவதற்கு ரூ.50 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படும்.

* 'குரூப் சி' மற்றும் 'டி' அரசு பணிகளில் 60 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்படும். அனைத்து யூனியன் பிரதேச பொது பல்கலைக்கழகங்களிலும் புதுச்சேரி மாணவர்களுக்கு 20 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்படும்..

12–ம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பாக செயல்படும் மாணவிகளுக்கு இ–ஸ்கூட்டர் வழங்க 'அன்பு தங்கை திட்டம்' தொடங்கப்படும்.

* புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

* மீன்பிடி தடைக்காலத்தில் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி ரூ.8 ஆயிரத்தில் இருந்து ரூ.12 ஆயிரமாக உயர்த்துவோம். * புதுச்சேரி இளைஞ ர்களுக்கு தொழில் நிறுவனங்கள் மூலம் மாதம் ரூ.10 ஆயிரம் உதவித்தொகையுடன் இன்டர்ன்ஷிப் வாய்ப்புகளை உருவாக்குவோம்.

# வாஷிங்டன் மேயர் பதவிக்கு போட்டியிடும் தமிழ் பெண்!



வாஷிங்டன், ஏப். 05–

தமிழகத்தில் பிறந்தவரான ரினி சம்பத், 31, அமெரிக்காவின் வாஷிங்டனின் மேயர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும் முதல் தெற்காசியர் என்ற சிறப்பை பெற்றுள்ளார். அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன் மேயர் பதவிக்கு, வரும் நவம்பரில் தேர்தல் நடக்க உள்ளது. அதற்கு முன், வரும் ஜூன் மாதத்தில், கட்சி வேட்பாளரை தேர்வு செய்யும் தேர்தல் நடக்க உள்ளது.

இந்த தேர்தலில், தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் பிறந்தவரான ரினி சம்பத் போட்டியிட இருக்கிறார். ரினி 7 வயதாக இருக்கும்போதே அவரது பெற்றோர் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்து விட்டனர்.

அதன்பின் அங்கேயே வளர்ந்த அவர், முன்னாள் அதிபர் பராக் ஒபாமா நிர்வாகத்தில் தேசிய கல்லூரி தலைமை கவுன்சிலில் கொள்கை இயக்கு நராக பணியாற்றியவர்.

பின்னர், அமெரிக்க அரசு நிறுவனங் களுக்கு சேவை செய்யும் முன்னணி மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்தில் மூத்த ஆலோசகராக ரினி சம்பத் பணியாற்றினார்.

ஜனநாயக கட்சி சார்பில் மேயர் வேட்பாளருக்கான போட்டியில் ரினி சம்பத் பங்கேற்கிறார். இதற்கு தேவையான கட்சியின் 4,500 பிரதிநிதிகளின் ஆதரவை பெற்றுள்ளார்.

அந்த வகையில், வாஷிங்டன் மேயர் தேர்தலில் போட்டியிடும் முதல் தெற்காசிய பெண் என்ற பெருமை இவருக்கு கிடைத்திருக்கிறது.

கடந்த 50 ஆண்டுகளாக, மேயர் தேர்தலில் ஜனநாயக கட்சியினரே வென்றுள்ளனர்.



# அட்சய திரிதியை எப்போது? பூஜையின் சுப நேரம், முறை மற்றும் முக்கியத்துவம்!



சித்திரை மாதத்தின் சுக்ல பட்சத்தில், அமாவாசைக்கு பிறகு வரும் வளர்பிறை மூன்றாம் நாள் அட்சய திரிதியை என்று அழைக்கப்படுகிறது. வேத சாஸ்திரங்களின்படி, அட்சய திரிதியை மிகவும் மங்களகரமான ஒரு நாளாகும். இந்த நாளில் எந்தவொரு மங்களகரமான காரியத்தையும் செய்யலாம். குறிப்பாக திருமணங்கள், மங்களகரமான நிகழ்ச்சிகள், சுப காரிய பேச்சு வார்த்தைகள், மற்றும் பொருட்கள் வாங்குவதற்கு மிகவும் உகந்தது. அட்சய திரிதியை அன்று செய்யும் எந்தவொரு நல்ல செயலும் நீடித்த பலன்களைத் தரும் என்பது நம்பிக்கை. மேலும், இந்த நாளில் பொருட்களை வாங்குவது மகாலட்சுமியின் ஆசீர்வாதங்களைப் பெற்றுத்தரும் என்றும் நம்பப்படுகிறது. அந்த வரிசையில், 2026 அட்சய திரிதியை எப்போது, வழிபாட்டு முறை மற்றும் அதன் முக்கியத்துவம் ஆகியவற்றை அறிந்துகொள்வோம்.

**அட்சய திரிதியை தேதி 2026**

சித்திரை மாதம், அமாவாசை முடிந்த மூன்றாம் நாள், வளர்பிறை திதி

திரிதியை திதி தொடக்கம்: ஏப்ரல் 19 ஆம் தேதி காலை 10:50

திரிதியை திதி முடிவு: ஏப்ரல் 20 ஆம் தேதி காலை 7:28 மணிக்கு முடிவடைகிறது.

அட்சய திரிதியை ஏப்ரல் 19 ஆம் தேதி கொண்டாடப்படும்.

அட்சயம் என்றால் அள்ள அள்ள குறையாதது என்று அர்த்தமாகும். இந்த நாளில், சுப நிகழ்ச்சி, புதிய தொடக்கம், ஒரு பொருளை வாங்குவது என்று நீங்கள் என்ன செய்தாலும் அது நன்மைகளைத் தரும் என்பது ஐதீகம்

உலகம் தொடங்கிய நாள் தான் அட்சய திருதியை!

இந்த நாளில், பொன் வாங்குவது மட்டுமல்ல, தானம் செய்வதும் உதவி செய்வதும் பல மடங்கு புண்ணியத்தை சேர்க்கும். தானம், தியானம், நதிகளில் நீராடுதல், உதவி செய்தல், உணவளித்தால் மற்றும் பூஜைகள் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபட வேண்டும். சாஸ்திரங்களின்படி, இந்த நாளில் எந்தவொரு புதிய செயலையும் தொடங்கினாலும் செழிப்பைக் கொண்டுவரும்.

அட்சய திருதியை அன்றுதான் கங்கை சொர்க்கத்திலிருந்து பூவுலகிற்கு இறங்கி வந்ததாக புராணங்கள் குறிப்பிடுகின்றன.

அட்சய திரிதியை அன்று உலக தொடக்கத்தையும் குறிக்கிறது.

சத்ய, திரேதா மற்றும் துவாபர யுகங்கள் அனைத்தும் அட்சய திரிதியை அன்றுதான் தொடங்கின என்று ஆன்மீக நூல்களில் உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இந்த புனித நாளில், உத்தரகாண்டில் உள்ள கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி கோயில்களின் கதவுகள் திறக்கப்பட்டு, சார் தாம் யாத்திரையின் தொடக்கம் குறிக்கப்படுகிறது.

அட்சய திருதியை அன்று தங்கம் வாங்கினால் தங்கம் குவியுமா?அட்சயம் என்றால் அள்ள அள்ளக் குறையாதது என்று அர்த்தமாகும். எனவே, இந்த நாளில் நல்ல விஷயங்கள் என்ன செய்தாலும், அது பல மடங்கு பெருகும், பலன் தரும் என்பது நம்பிக்கை. இதனால் தான், அட்சய திருதியை அன்று தங்கம் வாங்கினால் தங்கம் பெருகும் என்ற கருத்து பரவி இருக்கிறது!

தங்கம் வாங்குவது என்பது பொதுவாக ஒரு மங்களகரமான செயலாகக் கருதப்படுகிறது. எனவே, அட்சய திருதியை நாளில் தங்கம் வாங்குவது பரவலாக நடைமுறைக்கு வந்துவிட்டது. காதலர் தினம், பெண்கள் தினம் எவ்வாறு வணிக மயமாக்கப்பட்டதோ. அதே போல, அட்சய திருதியை 'தங்க மயமாக்கப்பட்டது'.எனவே, அட்சய திருதியை அன்று வாங்கலாம் என்பதை விட, என்ன செய்யலாம், யாருக்கு உதவலாம், என்ன தானம் வழங்கலாம் ஆகியவற்றில் கவனம் செலுத்தலாம். அதே நேரத்தில் குடும்பத்துக்காக நீங்கள் வாங்க நினைக்கும் பொருட்களை அட்சய திருதியை அன்று வாங்குவதில் தவறில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நிலவை நெருங்கியது நாசா அனுப்பிய ஆர்டமிஸ் விண்கலம்!



நிலவை ஆய்வு செய்யும் பணிக்காக நாசாவின் ஆர்டெமிஸ்–2 மிஷன் மூலம் நான்கு விண்வெளி வீரர்களுடன் ஓரியன் விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. 1969–ஆம் ஆண்டுக்குப் பிறகு மனிதர்களை நிலவுக்கு அனுப்புவதற்கான, ஆர்டெமிஸ் திட்டத்தை நாசா துவங்கியது. கடந்த 2–ஆம் தேதி ஆர்டெமிஸ்–2 விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் விண்வெளி வீரர்கள் நிலவில் தரையிறங்க மாட்டார்கள். அதற்குப் பதிலாக நிலவைச் சுற்றி வருவார்கள். இந்த பயணம் மனிதர்கள் இதுவரை சென்றதைவிட பூமியிலிருந்து கூடுதல் தூரம் செல்லும் முயற்சியாகும். மேலும் நான்கு விண்வெளி வீரர்களை ஏற்றிச் செல்லும் இந்த திட்டம், மனித விண்வெளி ஆய்வில் புதிய கட்டத்தைத் தொடங்குகிறது. நிலவின் மறுபக்கம் சென்று ஆய்வு செய்ய விண்வெளி வீரர்கள் திட்டமிட்டுள்ளனர்.




## ஆரோக்கியமான முடி வளர்ச்சியை பெற சில டிப்ஸ்!



தலைமுடி பெரியதாக வளர வேண்டும், நீளமாக வளர வேண்டும், அடர்த்தியாக வளர வேண்டும் என்றுதான் அனைவருமே ஆசைப்படுவோம். இது ஆண்களுக்கும் விதிவிலக்கல்ல. ஆனால் நம்மால் அதை செய்ய முடியாமல் போகிறது. இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் நம்முடைய ஆரோக்கியத்தில் நாம் கவனம் செலுத்தாதது தான் மிகவும் முக்கிய காரணமாக திகழ்கிறது. முடியின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி இயற்கையிலேயே வளர்ச்சியை தூண்டக்கூடிய சில டிப்ஸை பற்றி தான் இந்த அழகு குறிப்பு குறித்த பகுதியில் நாம் பார்க்க போகிறோம். ஒரு முடியின் ஆரோக்கியம் என்பது அந்த முடியை நாம் பராமரிப்பதை பொருத்து அமைகிறது. எந்த அளவிற்கு எண்ணெய் வைக்கிறோம், எந்த அளவிற்கு தலையை சுத்தம் செய்கிறோம், எந்த அளவிற்கு பராமரிக்கிறது, எந்த உணவுகளை சாப்பிடுவதன் மூலம் முடி ஆரோக்கியமாக இருக்கும் எந்த உணவு முறைகளை பின்பற்ற வேண்டும் என்று இருக்கிறது. அவற்றைப் பற்றிய ஒரு வழிமுறையை தான் இந்த பதிவில் பார்க்கப் போகிறோம்.

பொதுவாக தலைக்கு எண்ணெய் தேய்த்து குளிக்கும் பழக்கம் என்பது மிகவும் நல்ல பழக்கம். அப்படி எண்ணெய் தேய்க்கும் பழக்கம் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, இல்லாதவர்களாக இருந்தாலும் சரி, வாரத்திற்கு இரண்டு முறையாவது எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும். அதற்கும் வழிமுறைகள் இருக்கிறது. தலைக்கு தேய்க்கும் எண்ணெயை சூடு செய்து அதற்கு சரிசமமாக தண்ணீரை கலந்து நன்றாக கலந்து கொள்ள வேண்டும். பிறகு வெதுவெதுப்பான சூட்டில் தலைக்கு எண்ணெய் தேய்த்து ஒரு மணி நேரத்தில் இருந்து 2 மணி நேரம் வரை வைத்திருந்து பிறகு தலைக்கு குளிக்க வேண்டும். இதுவே தலைக்கு எண்ணெய் வைத்து குளிக்கும் முறையாகும். இப்படி செய்வதன் மூலம் தலைமுடியின் வேர்க்கால்கள் ஈரப்பதத்துடனும் எண்ணெய் பதத்துடனும் நன்றாக இருக்கும். அடுத்ததாக தலைக்கு குளிக்கும் பொழுது எந்த அளவிற்கு நாம் ஷாம்புவை பயன்படுத்துகிறோமோ அதைவிட மூன்று மடங்கு தண்ணீரை அதிகமாக சேர்த்து கரைத்து பிறகுதான் பயன்படுத்த வேண்டும். இப்படி செய்வதன் மூலம் ஷாம்புவில் இருக்கக்கூடிய கெமிக்கல் முடியில் நேராக பாதிப்பை ஏற்படுத்தாது. மேலும் ஷாம்புவை நாம் நேரடியாக பயன்படுத்தும் பொழுது விரைவிலேயே நம்முடைய முடி வறண்டு போக வாய்ப்புகள் இருக்கிறது. இப்படி தண்ணீருடன் சேர்த்து உபயோகப்படுத்தும் பொழுது முடி வறட்சியை நம்மால் தடுக்க முடியும்.

அடுத்ததாக இன்றைய காலத்தில் பெண்கள் பலரும் ஹேர் ட்ரை பயன்படுத்துகிறார்கள். அதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அப்படி செய்வதன் மூலம் முடி வலுவிழந்து போவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது. முடிக்கு கண்டிஷனரை பயன்படுத்த வேண்டும் என்று நினைப்பவர்கள் கடைகளில் விற்கக்கூடிய கிரீம்களை பயன்படுத்தாமல் தேங்காய் பாலை எடுத்து அதை தலைக்கு தடவி குளிப்பதன் மூலம் இயற்கையாக முடி கண்டிஷனராக திகழும். மேலும் கண்டறிக மூலிகை அழகு சாதனப் பொருட்கள் யோகா பயிற்சி வகுப்புகள் ஆன்மீக பயிற்சிகள் தியான இசை ஜோதிட ஆலோசனை சேவை அடுத்ததாக நாம் உண்ணக்கூடிய உணவுகளில் கவனம் செலுத்த வேண்டும்.


தினமும் ஒரு கொய்யாப்பழம், ஒரு நெல்லிக்காய், ஒரு ஆப்பிள் இதை முறையாக எடுத்துக் கொள்ள வேண்டும். இதோடு கீரை வகைகளையும் காய்கறிகளையும் எந்த அளவிற்கு அதிகமாக சேர்த்துக் கொள்கிறோமோ அந்த அளவிற்கு முடியின் ஆரோக்கியம் என்பது அதிகரிக்கும். எண்ணெயில் பொரித்த பலகாரங்களை சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். அசைவ உணவுகளை அளவோடு எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு குறைந்தது 3 லிட்டர் ஆவது தண்ணீர் அருந்த வேண்டும். ஆறு மணி நேரத்திலிருந்து எட்டு மணி நேரம் வரை உறக்கம் வேண்டும். இந்த வழிமுறைகளை யார் ஒருவர் முறையாக பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு ஆறு மாதத்தில் அவர்கள் எதிர்பார்த்ததை விட அதிக அளவு முடி வளர்ச்சி ஏற்படும். நம்முடைய வாழ்க்கை சூழலை நாம் மாற்றினால் தான் நம்முடைய உடலின் ஆரோக்கியமும் அதிகரிக்கும். இயற்கையான முறையில் நம்முடைய முடியின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி அடர்த்தியாக வளரச் செய்வோம்.



பழனி முருகன் கோவில் பங்குனி உத்திரம் திருவிழா உபயதாரர்களுக்கு, திருக்கோவில் சார்பில் அருள் பிரசாதம் வழங்கப்பட்டது. இதில் கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, உபயதாரர்கள் பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, பெரிய நாயகி கல்வி அறக்கட்டளை சுந்தரம், சங்கர் & கோ சுந்தர், சுவாமி விலாஸ் முருகேசன், மருதுசாமி, முருகன் சா மில் காளிங்கராயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருப்பரங்குன்றம் கோவிலில் தேரோட்டம் கோலாகலம்: திரளான பக்தர்கள் வழிபாடு!

திருப்பரங்குன்றம், ஏப். 05–



முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதல்படை வீடான மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி திருவிழா 15 நாட்கள் விமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 23–ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடந்து வருகிறது. நேற்று முன்தினம் முருகப்பெருமானுக்கு பட்டாபிஷேகம் நடந்தது. திருவிழாவின் முத்தாய்ப்பாக நேற்று சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை அம்பாளுக்கு திருக்கல்யாணம் கோலாகலமாக நடந்தது. முன்னதாக நேற்று அதிகாலை 5 மணி அளவில் உற்சவர் சன்னதியில் சுப்பிரமணிய சுவாமிக்கும், தெய்வானை அம்பாளுக்கும் தங்கம், பவளம், வைடூரிய ஆபரணங்களும், வண்ண பட்டாடையாலும், பல வண்ண மலர்களாலும் மணக்கோல அலங்காரம் செய்யப்பட்டது.

பின்னர் மேளதாளங்கள் முழங்க உற்சவர் சன்னதியில் இருந்து முருகப்பெருமான், தெய்வானை அம்பாளுடன் புறப்பட்டு சன்னதி தெரு வழியாக பசுமலை மூலக்கரை அருகே உள்ள சந்திப்பு மண்டபத்திற்கு சென்றார்.

அதேவேளையில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்து மேளதாளங்கள் முழங்க பிரியாவிடையுடன் சுந்தரேசுவரரும், மீனாட்சி அம்மனும் தனித்தனி பல்லக்குகளில் புறப்பட்டு திருப்பரங்குன்றம் நோக்கி வந்தனர்.

காலை 8 மணிக்கு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முருகப்பெருமான் தனது தாய், தந்தையான மீனாட்சி அம்மன்–சுந்தரேசுவரரை வணங்கி வரவேற்றார்.

இதனையடுத்து மகா தீபாராதனை நடைபெற்றது. அங்கிருந்து முருகப்பெருமான், தெய்வானை அம்பாள், மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் திருப்பரங்குன்றம் நோக்கி வந்தனர். வழிநெடுகிலும் ஆங்காங்கே அமைக்கப்பட்டு இருந்த திருக்கண்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். கோவிலுக்குள் லட்சுமி தீர்த்தம் செல்லும் வழியில் உள்ள ஒடுக்கம் மண்டபத்தில் கண்ஊஞ்சல் நடந்தது. தொடர்ந்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்த ஆறுகால் மண்டபத்தில் பிரியாவிடையுடன் சுந்தரேசுவரரும், மீனாட்சி அம்மனும் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தனர். இதனை தொடர்ந்து தெய்வானையுடன் முருகப்பெருமான் மணமேடையில் எழுந்தருளினார். அக்னி வளர்க்கப்பட்டு திருமண சடங்குகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன.

வெண்பட்டு உடுத்தி முருகப் பெருமானும், மஞ்சள் பட்டு உடுத்தி தெய்வானை அம்பாளும் அருள்பாலித்தனர். சிவாச்சாரியார்கள் முருகப்பெருமான் மற்றும் தெய்வானை அம்பாளின் பிரதிநிதிகளாக இருந்து பட்டாடை மற்றும் பூமாலைகளை மாற்றிக் கொண்டனர் இதனையடுத்து பகல் 12.20 மணிக்கு மேளதாளங்கள் முழங்க, தெய்வானை அம்பாளுக்கு முருகப்பெருமான் மங்கல நாண் சூட்டி திருக்கல்யாண வைபோகம் கோலாகலமாக நடந்தது.

அப்போது அங்கு கூடி இருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள், ‘அரோகரா’ கோஷம் முழங்க அட்சதை தூவி வழிபட்டனர். மேலும் பெண்கள் புதிய மங்கலநாண் மாற்றிக் கொண்டனர். திருக்கல்யாணத்தையொட்டி கோவில் வளாகத்தில் உள்ள வள்ளி தேவஸ்தான மண்டபத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நேற்று இரவு 16 கால் மண்டபம் அருகே பிரியா விடை நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் பூப்பல்லக்கில் தெய்வானையுடன் முருகப்பெருமான் எழுந்தருளினார். பின்னர் சுந்தரேசுவரரும்–மீனாட்சி அம்மனும் விடைபெற்று மதுரைக்கு புறப்பட்டனர். இந்நிலையில் விழாவின் சிகர நிகழ்ச்சியாக இன்று (ஞாயிற்றுக்கிழமை) மகா தேரோட்டம் கோலாகலமாக தொடங்கி நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் “அரோகரா..” முழக்கத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்து வருகின்றனர். 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# 37 ஆண்டு பயணம் நிறைவு: காங்கிரஸிலிருந்து விலகினார் அமெரிக்கை நாராயணன்!

சென்னை, ஏப். 05–



இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியுடன் 37 ஆண்டுகளாக இணைந்து பொதுச்சேவையில் ஈடுபட்டு வந்த அமெரிக்கை வி நாராயணன், அந்தக் கட்சியிலிருந்து விலகியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள பத்திரிக்கை செய்தியில் தெரிவித்தி ருப்பதாவது;–

“பொதுச்சேவை என்பது நோக்கமும் செயலும் ஒன்றுபட்டு இருக்கும்போது மட்டுமே அர்த்தம் பெறுகிறது. நீண்ட கால சிந்தனைக்குப் பிறகு, மக்களுடன் நேரடியாகவும் தன்னிச்சையாகவும் செயல்படும் என் முயற்சி, கட்சியின் தற்போதைய செயல்முறையுடன் இனி பொருந்தவில்லை என்று நான் உணர்ந்துள்ளேன்.”

அவர் தொடர்ந்து பொதுச்சேவையில் ஈடுபட்டு மக்களுக்கு சேவை செய்வார் என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸிலிருந்து விலகும் இந்த நிலையில், அனைத்து அரசியல் கட்சிகளிலும் உள்ள தொண்டர்கள்/உறுப்பினர்களுக்கு அவர் விடுத்துள்ள செய்தி:

“ஒரு அரசியல் கட்சியின் மூலம் பொதுச்சேவையில் ஈடுபடுபவர்கள், ‘அந்தக் கட்சியின் மூலம் நாட்டிற்கு நான் என்ன செய்தேன்?’ என்று தங்களைத் தாங்களே கேட்க வேண்டும்.

அதே நேரத்தில், ‘அந்தக் கட்சி நாட்டிற்கு தொடர்ந்து சேவை செய்கிறதா?


சமூகத்திற்கு உண்மையாக பணியாற்ற விரும்பும் நபர்களுக்கு அது அர்த்தமுள்ள வாய்ப்புகளை அளிக்கிறதா?’ என்பதையும் கேட்க வேண்டும். கட்சி என்பது பொதுமக்களுக்கு சேவை செய்யும் ஒரு ஆயுதம். அந்த ஆயுதம் காலத்திற்கு ஏற்ப மாற்றமடையவில்லை என்றால், அதை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும்.

ஏவுகணை காலத்தில், கையில் கத்தியுடன் களத்தில் நிற்பது முட்டாள்தனமே.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரிலையன்ஸ் ஜியோவுக்கு செக் வைத்த TRAI: ஏப். 14 வரை கெடு?

புதுடெல்லி, ஏப். 05–




இந்தியாவில் தொலைதொடர்பு சேவை வழங்குவதில் தனியார் நிறுவனங்கள் தான் ஆதிக்கம் செலுத்துகின்றன. ரிலையன்ஸ் ஜியோ ,ஏர்டெல், வோடபோன் ஐடியா என இந்த பட்டியலில் முதல் மூன்று இடங்களில் தனியார் நிறுவனங்களும் நான்காவது இடத்தில் அரசுக்கு சொந்தமான bsnl நிறுவனமும் இடம் பிடித்துள்ளன.

இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான சந்தாதாரர்களை கொண்டு இயங்கக்கூடிய நிறுவனமாக முகேஷ் அம்பானிக்கு சொந்தமான ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் தொடர்ந்து தன்னை தக்க வைத்து கொண்டு இருக்கிறது. கிட்டத்தட்ட 500 மில்லியனுக்கும் அதிகமான சந்தாதாரர்களுடம் செயல்படக்கூடிய ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்திற்கு இந்தியாவின் தொலை தொடர்பு ஒழுங்குமுறை ஆணையமான டிராய் ஒரு முக்கிய உத்தரவை பிறப்பித்திருக்கிறது. மிண்ட் தளம் வெளியிட்டுள்ள செய்தியின் படி சில ரீசார்ஜ் திட்டங்களில் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் வெளிப்படை தன்மை விதிமுறைகளை மீறுவதாகவும், பாகுபாடு காட்டுவதாகவும் டிராய் கண்டறிந்துள்ளதாம். அதனை மாற்றி அமைக்கும்படி தொலை தொடர்பு துறை ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. ஏப்ரல் 14ஆம் தேதிக்குள் இதனை முடிக்க வேண்டும் என டிராய் தன்னுடைய உத்தரவில் தெரிவித்து இருக்கிறதாம்.

# த.வெ.க. தொண்டர்கள் சென்ற வேன் 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது!

நீலகிரி, ஏப். 05–

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வருகிற 23–ந்தேதி நடைபெறுகிறது. இதையொட்டி நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளராக நாமக்கல்லை சேர்ந்த வக்கீல் தங்கராஜ் அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார்.இதையொட்டி நாமக்கல்லில் இருந்து தேர்தல் பிரசாரம் செய்ய அவரது ஆதரவாளர்கள் குன்னூருக்கு வேனில் வந்தனர். வழியில் சென்னையை சேர்ந்த த.வெ.க. நிர்வாகிகள் 7 பேர் ‘லிப்ட்’ கேட்டு அந்த வேனில் ஏறினர். அவர்களை ஏற்றிக் கொண்டு வேன் கரும்பாலம் அருகே சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த வேன் சாலையோர 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. இதனால் வேனில் இருந்தவர்கள் பயந்து அபாயக் குரல் எழுப்பினர். இதை அந்த வழியாக வந்தவர்கள் பார்த்து போலீசார் மற்றும் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் விரைந்து வந்த அவர்கள் பொதுமக்கள் உதவியுடன் வேனில் இருந்தவர்களை மீட்டு குன்னூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்தில் வேனில் இருந்த டிரைவர், கிளீனர் உள்பட 21 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து குறித்து கேத்தி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.






இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு அலுவலக உபகரணங்கள் மற்றும் அச்சிடும் துறை – 23 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, தமிழ்நாடு

அறிவிப்பு எண்: B2/6508/2026 தேதி: 06.03.2026

பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 23 உதவி ஆஃப்செட் இயந்திர தொழில்நுட்ப வல்லுநர், இளநிலை மின்சார வல்லுநர், இளநிலை மெக்கானிக், பிளம்பர் மின்சார வல்லுநர் பணியிடங்கள்

பணியிட மாற்றம்: சென்னை

தொடங்கும் தேதி: 06.03.2026

கடைசி தேதி: 08.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.statio–neryprinting.tn.gov.in/

# பயணிகள் ரெயில் சேவையில் மாற்றம்!



சென்னை,ஏப். 05–

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் நடைபெறும் மறுசீரமைப்புப் பணி காரணமாக ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

* திருநெல்வேலி– சென்னை எழும்பூர் நெல்லை விரைவு ரெயில் (12632), ஏப்ரல் 6 முதல் ஏப்ரல் 21–ம் தேதி வரை தாம்பரம் வரை மட்டும் இயக்கப்படும்.
* ராமேஸ்வரம்– சென்னை எழும்பூர் விரைவு ரெயில் (16752), நாளை முதல் மறு அறிவிப்பு வரும் வரை தாம்பரம் வரை மட்டும் இயக்கப்படும்.
* ஐதராபாத்– தாம்பரம் சார்மினார் விரைவு ரெயில் (12760), இன்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை சென்னை கடற்கரை ரெயில் நிலையம் வரை மட்டும் இயக்கப்படும்.
* சென்னை எழும்பூர்– செங்கோட்டை பொதிகை விரைவு ரெயில் (12661), ஏப்ரல் 7–ந்தேதி முதல் ஏப்ரல் 22–ந்தேதி வரை தாம்பரத்திலிருந்து புறப்படும்.
* சென்னை எழும்பூர்– ராமேஸ்வரம் விரைவு ரெயில் (16751), ஏப்ரல் 7–ந்தேதி முதல் மறு அறிவிப்பு வரும் வரை தாம்பரத்திலிருந்து இருந்து புறப்படும்.
* தாம்பரம்– ஐதராபாத் சார்மினார் விரைவு ரெயில் (12759), நாளை முதல் மறு அறிவிப்பு வரும் வரை சென்னை கடற்கரையில் இருந்து புறப்படும்.

இவ்வாறு தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.




## ‘ஜன நாயகன்’ வெளியீட்டுத் தேதி இதுவா?




ஜன நாயகன் திரைப்படத்தின் வெளியீட்டுத் தேதியைத் தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஜன நாயகன் திரைப்படம் பொங்கலையொட்டி ஜனவரி 9 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும், சில காட்சிகள் மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் இருப்பதாகக் கூறி சான்றிதழ் வழங்குவதை தணிக்கை வாரியம் நிறுத்தி வைத்தது.

தொடர்ந்து, நடைபெற்ற வழக்கு விசாரணைகளில் இப்படத்தை மறுதணிக்கை செய்ய நீதிமன்றம் உத்தரவு அளித்தது. இதனால், ஜன நாயகன் வெளியீட்டில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டதுடன் வணிக ரீதியாக சில பின்னடைவுகளும் ஏற்பட்டன. தற்போது, மறுதணிக்கைக்கான திரைப்படத்தை மத்திய சான்றிதழ் வாரியம் பார்த்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், இப்படத்தை மே 7 ஆம் தேதி வெளியிடத் தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## எடப்பாடி பழனிச்சாமியை வீட்டுக்கு அனுப்புவோம்... துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ...!

புதுக்கோட்டை, ஏப். 05–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளரும் அமைச்சருமான எஸ் ரகுபதி ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு திருமயம் அண்ணா சீரணி கலையரங்கம் முன்பு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பரப்பரை மேற்கொண்டார். பரப்புரையின் போது பேசிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,



வாரா வாரம் மோடி மற்றும் அமித்ஷா வந்து செல்கிறார்கள் தமிழகத்திற்கு ஆனால் தமிழகத்திற்கு எந்த திட்டமும் நிதியும் வரவில்லை தமிழ்நாட்டை பழிவாங்கிய பாஜகவை தமிழ்நாட்டிற்குள் நுழைய விடலாமா இந்தத் தேர்தல் என்பது தமிழ்நாட்டில் ஜெயிக்க போறது தமிழ்நாடு அணியா டெல்லி அணியா என்பதை பார்த்து விடலாம் டெல்லி அடிமை அணி என்பது மோடியும் எடப்பாடி அடிமை கூட்டமும் இவர் போல ஒரு முரட்டு அடிமையை எங்கு பார்த்ததில்லை மோடி டெல்லிக்கு வர சொன்னால் நடந்தே ஓடி செல்வார், போன சட்டமன்றத்தில் இருந்து பாஜகவுக்கு அதிமுகவை வாடகைக்கு கொண்டு இருந்தார். இந்த சட்டமன்ற தேர்தலில் அதிமுகவை பாஜகவுடன் விற்று விட்டார் இதுவரை 10 தோல்வியை கொடுத்தோம் வரும் சட்டமன்ற தேர்தலுடன் மொத்த தோல்வியும் கொடுத்து எடப்பாடி பழனிச்சாமியை வீட்டுக்கு அனுப்பி விட வேண்டும் என பேசினார்.

## ஆலங்குடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மெய்யநாதன் வாக்கு சேகரிப்பு!

புதுக்கோட்டை, ஏப். 05–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி சுனையக்காடு ஊராட்சி பாலைவனம் கறம்பக்காடு பகுதியில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி சின்னமான உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு பொதுமக்களிடையே வாக்குச் சேகரிப்பு பணியில் ஈடுபட்டார். அப்போது வாக்காளர் மத்தியில் பேசிய ஆலங்குடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மெய்யநாதன், மாணவ, மாணவியரின் தனித்திறமைகளை அடையாளம் கண்டு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் விதமாக உருவாக்கப்பட்டதும், திறன் மேம்பாடு மற்றும் போட்டி தேர்வுகளுக்கு ஊக்கத்தொகையுடன் கூடிய பயிற்சி வழங்கக்கூடிய திட்டமான 'நான் முதல்வன் திட்டத்தின்' தந்த திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் என கூறினார்.




## திருவாடானையில் கீர்த்திகா முனியசாமி தீவிர வாக்கு சேகரிப்பு!

ராமநாதபுரம், ஏப். 05–

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை சட்டமன்ற தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக) தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி (NDA) வேட்பாளர் கீர்த்திகா முனியசாமி, திருவாடானை தொகுதிக்குட்பட்ட ஓம் சக்தி நகர், பாரதிநகர், மகா சக்தி நகர், பட்டண காத்தான் நகர், ராம் நகர் உள்ளிட்ட பகுதிகளில் வீடு தோறும் சென்று வாக்காளர்களை நேரில் சந்தித்து ஆதரவு கோரினார்.



வாக்காளர்களுடன் நேரடியாக கலந்துரையாடிய அவர், தொகுதி வளர்ச்சி, அடிப்படை வசதிகள் மேம்பாடு, குடிநீர், சாலை வசதி உள்ளிட்ட பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

## வாக்காளர் தகவல் சீட்டு தரும் பணிகள் விரைவில் தொடக்கம்!

சென்னை, ஏப். 05–

சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வாக்காளர் தகவல் சீட்டு தரும் பணியை வரும் 10–ம் தேதி முதல் தொடங்க தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. வாக்குச்சாவடி பெயர், வாக்குப்பதிவு நாள், நேரம் உள்ளிட்ட தகவல்கள் இடம் பெறும். வரும் 17–ம் தேதிக்குள் இப்பணியை முடிக்க வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த தேர்தலில் பூத் சிலிப்–க்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டு வழங்கப்படுகிறது.




## இதிலும் சாதனை... விஜய்யின் உறுதிமொழி பத்திரத்தை 3.20 லட்சம் பேர் பதிவிறக்கம்!

சென்னை, ஏப். 05–

இந்திய தேர்தல் கமிஷனின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://affidavit.cci.gov.in/ பக்கத்தில் அனைத்து வேட்பாளர்களின் பிரமாண பத்திரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. ஒரு வேட்பாளரின் சொத்துகள் விவரம், குற்ற வழக்குகள் நிலுவை குறித்த வெளிப்படையான தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் இதில் பல்வேறு முக்கிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.




இந்த தேர்தலில் முதன் முறையாக களம் காணும் த.வெ.க. தலைவர் விஜய் பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். அவரது பிரமாண பத்திரத்தை மட்டும் இணையதளத்தில் இருந்து அதிக பட்சமாக சுமார் 3.20 லட்சம் பேர் பதிவிறக்கம் செய்துள்ளனர். அதிலும் இந்த எண்ணிக்கை சாதனை படைத்துள்ளது.

அவருக்கு அடுத்தப்படியாக மு.க.ஸ்டாலினின் பிரமாண பத்திரத்தை சுமார் 1.30 லட்சம் பேர் பதிவிறக்கம் செய்துள்ளனர்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்ற தொகுதியின் வேட்பாளராக தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பாக பாரதிய ஜனதா கட்சியின் மாநில துணை தலைவர் V.P. துரைசாமி மகன் டாக்டர்.பிரேம்குமார் களமிறக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் ராசிபுரம் அடுத்த ஆண்டகளூர் கேட் பகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பாக அவருக்கு மாலை அணிவித்து,பட்டாசு வெடித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனை அடுத்து அவர் ஆண்டகளூர் கேட் பகுதியில் இருந்து திறந்த வெளி காரில் நின்று கொண்டு ராசிபுரம் பழைய பேருந்து நிலையம் மற்றும் முக்கிய கடைவீதி வழியாக சென்று மக்களை சந்தித்தார்.



ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி த.வெ.க.வேட்பாளர் பாண்டி தாலுகா அலுவலகத்தில்வேட்புமனு தாக்கல் செய்தார்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க.வேட்பாளர் ஆ.லோகிராஜன் தேர்தல் நடத்தும் அலுவலர் கவிதாவிடம் வேட்பு மனுதாக்கல் செய்தார்.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) வேட்பாளராக காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், ராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தலில் போட்டியிட வேட்புமனுவை தாக்கல் செய்தார். இந்த வேட்புமனு தாக்கல் நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சியினரும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.



பெரியகுளம் சட்டமன்ற தொகுதி அ.ம.மு.க.வேட்பாளர் கதிர்காமு வேட்புமனு தாக்கல் செய்தார்.



மீண்டும் திமுக சார்பில் களம் காணும் இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள வெண்ணந்தூர் ஒன்றியம் பொன்பரப்பிப்பட்டி ஊராட்சியில் கரட்டுபாளையம், அண்ணாமலை பட்டி, ஆலாம்பாளையம் பகுதி மக்களிடம் திமுக வேட்பாளர் அமைச்சர் மா.மதிவேந்தன் கிராம மக்களை சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டி வந்தேன். உடன் ஒன்றிய கழக செயலாளர் அண்ணன் திரு. RM. துரைசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இபிஎஸ் சொன்ன பொய்களை புத்தகமே போடலாம்; சொல்கிறார் முதல்வர் ஸ்டாலின்!

விருதுநகர், ஏப். 05–

இபிஎஸ் சொல்லியிருக்கும் பொய்களை புத்தகமே போடலாம்; தான் சொன்ன பொய்களிலிருந்து தப்பிக்க அடுத்தடுத்து பொய் சொல்கிறார் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். விருதுநகரில் தேர்தல் பிரசாரத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: இபிஎஸ் சொல்லியிருக்கும் பொய்களை புத்தகமே போடலாம்; தான் சொன்ன பொய்களிலிருந்து தப்பிக்க அடுத்தடுத்து பொய் சொல்கிறார்.



காமராஜர் இறந்தபோது மெரினா கடற்கரையில் இடம் தர மறுத்தோம் என்கிறார் இபிஎஸ். சங்கி கூட்டணியில் சேர்ந்துவிட்டதால் வாட்ஸ் அப் வதந்தி போல் வாந்தி எடுக்கிறார். துரோகத்துக்கு உருவம் கொடுத்தால் அது இபிஎஸ் தான்; தன்னை நம்பியவர்களுக்கு அல்வா கொடுத்தவரை மக்கள் எப்படி நம்புவார்கள். வேளாண் சட்டங்களை ஆதரித்து விவசாயிகளுக்கு துரோகம். பாஜவுடன் சேர்ந்து சிறுபான்மையினருக்கு துரோகம்.

கட்சியில் உங்களை வளர்த்த சசிகலா, செங்கோட்டையனுக்கு துரோகம், ஓ.பன்னீர் செல்வத்துக்கு துரோகம். ஏற்கனவே 10. அடுத்து 11. விசுவாசத்திற்கு ஒரு உருவம் கட்டப்பா என்றால் துரோகத்திற்கு உருவம் இபிஎஸ். இல்லத்தரசி திட்ட வாக்குறுதியால் இபிஎஸ் வேதனையில் உள்ளார். பியூஸ் போன சாமி ஆகிவிட்டார். அதில் ஊழல் செய்துவிடுவோம் என்கிறார்.


அவர் அவரது ஆட்சியில் நடப்பதையே எங்கள் ஆட்சியிலும் நடக்கும் என நினைக்கிறார். தேர்தல் வந்தால் இவர்களுக்கு காமராஜர் மீது மரியாதை வந்து விடும். டில்லியில் அவரை வீட்டோடு வைத்து எரிக்க முயன்றவர்கள் சங்கிகள். இப்படிப்பட்ட தமிழின விரோதிகளை தடுக்க வேண்டும். பாஜ ஆட்சியில் இருக்கும் மாநிலங்கள் எந்த நிலையில் உள்ளது என்பது மக்களுக்கு தெரியும். தமிழகம் அணியா? டில்லி அணியா? இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## சட்மன்ற தேர்தல்: இதுவரை எத்தனை பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர் தெரியுமா?

சென்னை, ஏப். 05–

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23–ம் தேதி நடைபெறவுள்ளது. அதற்கு முன்பாக வேட்பாளரை இறுதி செய்யும் நடவடிக்கையாக வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது. வேட்புமனு தாக்கல் கடந்த மாதம் (மார்ச்) 30–ம் தேதி தொடங்கியது. நாளையுடன் (திங்கட்கிழமை) நிறைவடைகிறது.

இடையில் 4 நாட்கள் விடுமுறை என்பதால் 4 நாட்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய அவகாசம் கிடைத்தது. அதில் 3 நாட்கள் முடிவடைந்துவிட்டன. மார்ச் 30–ம் தேதியான முதல் நாளில் 573 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 2–வது நாளான கடந்த 2–ம் தேதி 788 மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். 3–ம் நாளான நேற்று 1,639 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வகையில் நேற்றுடன் மொத்தம் 3,000 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



ஏப் 6 (திங்கட்கிழமை) வேட்புமனு தாக்கலுக்கு இறுதி நாளாகும். காலை 11 மணியில் இருந்து மதியம் 3 மணிக்குள் வேட்புமனுவை தாக்கல் செய்துவிட வேண்டும். இதுகுறித்து தேர்தல் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு நாளை கடைசி நாளாகும். பிற்பகல் 3 மணிக்குள் தேர்தல் நடத்தும் அதிகாரியின் அலுவலக அறைக்குள் சென்றுவிட வேண்டும். சரியாக பிற்பகல் 3 மணிக்கு தேர்தல் நடத்தும் அதிகாரியின் அலுவலக அறையின் பிரதான வாயில் மூடப்பட்டுவிடும். 3 மணிக்குள் அவரது அலுவலகத்திற்குள் வந்துவிட்டவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுவர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## விஜயின் பிரச்சார வாகன மதிப்பு பிரசார கேரவன் மதிப்பு ரூ.6 கோடியே 25 ஆயிரம்!

சென்னை, ஏப். 05–

பெரம்பூர், திருச்சி கிழக்கு தொகுதிகளில் திருத்தப்பட்ட பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்த விஜய், இதில், பிரசார கேரவன் குறித்த விவரத்தை சேர்த்துள்ளார். அதில், விஜய்யின் பிரசார கேரவன், அவர் பெயரிலேயே வாங்கப்பட்டுள்ளது. பிரசார கேரவன் மதிப்பு ரூ.6 கோடியே 25 ஆயிரம். கேரவனுடன் சேர்த்து விஜய்யின் அசையும் சொத்து மதிப்பு ரூ.410 கோடி என பிரமாண பத்திரத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சட்டசபை தேர்தல் - அமித் ஷா, ராகுல்காந்தி சென்னை வருகை!

சென்னை, ஏப். 05–

மத்திய அமைச்சர் அமித்ஷா மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி ஏப்ரல் 6ஆம் தேதி,சென்னை வரும் நிலையில், அமித்ஷா புதுச்சேரி செல்லும் நிலையில், ராகுல் காந்தி சென்னையில் காங்கிரஸ் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.



### ஜி.கே.வாசன், என்.டி.ஏ. கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம்!

கும்பகோணம், ஏப். 05–

தமிழக சட்டசபை தேர்தலில் என்.டி.ஏ கூட்டணியில் இணைந்துள்ள த.மா.க கட்சியில் தலைவர் ஜி.கே.வாசன், ஏப்ரல் 06ஆம் தேதி முதல் என்.டி.ஏ. கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ள இருக்கிறார். நாளை கும்பகோணத்தில் பிரச்சாரத்தை தொடங்கும் வாசன், ஏப்ரல் 21–ந் தேதி சென்னையில் பிரச்சாரத்தை நிறைவு செய்கிறார்.



பெரியகுளம் சட்டமன்ற தொகுதி (தனி) த.வெ.க வேட்பாளர் சபரி ஐங்கரன் வேட்புமனு தாக்கல் செய்தார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020